சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது– திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை

அரசாணை(நிலை) எண்.136

ஹேவிளம்பி – ஐப்பசி–29
திருவள்ளுவர் ஆண்டு–2048
நாள்: **15.11.2017**

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1)துறை, நாள் 29.05.2017.
2. அரசாணை (நிலை) எண். 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை, நாள் 15.09.2017.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.19681/2017/NEDM-2, நாள் 27.09.2017 மற்றும் இணைப்பு.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–18–ஆம் ஆண்டுக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை (MLACDS) நிறைவேற்றுவதற்காக ரூ.470.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான நிர்வாக ஒப்புதலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ஐ செயல்படுத்திட ஏதுவாக உரிய வழிகாட்டி நெறிமுறைகளும் உள்ளடக்கி ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.07.2017 அன்று சட்டமன்ற பேரவையில் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ஒவ்வொரு தொகுதிக்கும் 2017–2018–ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தியும், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.2.50 கோடியில் (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்), "வரையறுக்கப்பட்ட கூறு நிதிக்கு" **(Tied Component)** ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மற்றும் "வரையறுக்கப்படாத கூறு நிதிக்கு" **(Un Tied Component)** ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கியும் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டது. இவ்வாறு ஒப்பளிக்கப்பட்ட

செலவினம் பற்று வைக்கப்பட வேண்டிய தலைப்புகள் குறித்த விவரங்களும் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட்டன:–

"4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 789 ஆதி–திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JB சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-789-JB 1606)

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் –JC சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-796-JC 1609)

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் –JF சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-800-JF 1602)"

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேலே பத்தி 2–இல் கூறியவாறு உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வரையறுக்கப்பட்ட கூறு நிதி ரூ.1.50 கோடி முழுமைக்கும் குடிநீர் பணிகள் மட்டும் எடுத்து செயல்படுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், தற்போது தமிழ்நாட்டில் மழை சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலாக பெய்துள்ளதன் அடிப்படையில், பல மாவட்டங்களில் பரவலாக குடிநீர் விநியோகம் சீரான நிலையை எய்தியுள்ளது என்றும், 2017–18–ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1.50 கோடி வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் முழுமையாக குடிநீர் பணிகள் மட்டும் எடுக்கப்பட வேண்டும் என்ற வரையறையை தளர்த்திடும் பொருட்டு, தற்சமயம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் அனுமதிக்கப்படும் ரூ.1.50 கோடி நிதியில், ரூ.20.00 இலட்சத்தில் பள்ளிகள் உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், மீதமுள்ள ரூ1.30 கோடி நிதியினை சட்டமன்ற உறுப்பினரின் விருப்புரிமைப்படி அனுமதிக்கப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ளவும் வழிவகை செய்யலாம் என்றும், அதே போல, வரையறுக்கப்படாத கூறுநிதியான ரூ.1.00 கோடியில், தடைசெய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணியையும் சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யவும் அனுமதித்து, 2017–18–ம் ஆண்டிற்கென திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை (Revised Guidelines) வெளியிடும்படி அரசினை கோரியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனைச் செய்து, அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து அதன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 2017–18–ஐ செயற்படுத்துவதற்கான விரிவான திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் வெளியிடப்படுகிறது.

5. இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற .எண். 57434/Fin(RD)/2017, நாள்15.11.2017-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்/செயலாளர் – II, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
15.11.17

<u>அரசாணை (நிலை) எண்.136, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1)த்துறை, நாள்.15.11.2017</u>

# <u>இணைப்பு</u>

## <u>2017-18-ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள்</u>

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு பணிகளை உடனடியாக கண்டறிந்து அதனை செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தனது சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அப்பணியினை இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்திட பரிந்துரை செய்திடுவார்கள். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி ரூ.2.00 கோடி தொகையானது 2017–18ம் ஆண்டு முதல் ரூ.2.50 கோடி தொகையாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ஒதுக்கீடான ரூ. 2.50 கோடியில், கீழ்க்காணும் முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.1.50 கோடி “வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக” ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மீதமுள்ள “வரையறுக்கப்படாத கூறு நிதியான” ரூ.1 கோடியில், தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணியையும் தம் விருப்பத்தின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யலாம். அதற்கான திருந்திய வழிகாட்டு நெறிமுறைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

**1. வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்:-**

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ரூ. 1.50 கோடி, வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் செலவு செய்யப்பட வேண்டும் :-

1.1 <u>பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.20.00 இலட்சம்</u>: 2017-18ம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி பள்ளிகள் / நகராட்சி பள்ளிகள் / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / அரசு பள்ளிகள் மட்டும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

1.2 <u>இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.1.30 கோடி :</u> இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதி பணிகளில், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்கண்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.1.30 கோடியில் எடுத்து செய்ய பரிந்துரைக்கலாம்.

a). <u>ஊரகப் பகுதிகளில் :–</u>

1. குடிநீர்ப் பணிகள் தொடர்பாக குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குதல், மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான் போன்ற பணிகள் மேற்கொள்ளலாம்.

2. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

3. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.

4. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல். (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்)

5. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் / தெருக்கள், பாதைகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.

6. அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள், அங்கன்வாடி குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள் மற்றும் இதரப் பணிகள்.

7. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.

8. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

9. பாலங்கள் கட்டுதல்.

10. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்.

11. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

12. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

13. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

14. உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**b). நகர்ப்புறப் பகுதிகளில் :–**

1. குடிநீர்ப் பணிகள் தொடர்பாக குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குதல், மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான் போன்ற பணிகள் மேற்கொள்ளலாம்.
2. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். நகர்ப்புறப் பகுதிகளில் LED தெருவிளக்குகள் நிறுவுதல். (மத்திய அரசு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)
3. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
4. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல். (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்)
5. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.
6. அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள், அங்கன்வாடி குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள் மற்றும் இதரப் பணிகள்.
7. அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் கட்டுதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள்.
8. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.
9. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.
10. பாலங்கள் கட்டுதல்.
11. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.

12. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

13. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

14. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

15. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

16. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்.

17. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதினால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

18. உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

**2. வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.00 கோடி எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **“எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத்”** தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்துச் செய்யலாம். அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**3. எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பின்வரும் தடை செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் கூடாது. அவற்றுள் விதிவிலக்காக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளை விதிமுறைகளின்படி மேற்கொள்ளலாம்.

3.1 மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள், கூட்டுறவு சார்ந்த சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

<u>விதிவிலக்கு :-</u>

I. நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்.

II. அரசாணை நிலை எண். 179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 19.12.2013ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்படாத கூறு நிதியிலிருந்து மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் இதுவரை சுற்றுச்சுவர் கட்டாமல் இருப்பின் இப்பணியினை நடப்பு 2017-18ம் நிதியாண்டில் மேற்கொள்ளலாம்.

III. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

3.2 தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

<u>விதிவிலக்கு :-</u>

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)–ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.

3.3 அனைத்து வகையான புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல்.

<u>விதிவிலக்கு :-</u>

அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2007 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.4 அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்:-

<u>விதிவிலக்கு :-</u>

(i) 2016–17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14–வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. 2016–17ம் ஆண்டில் அவ்வாறு கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2017–18ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை எண். 95 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள்18.8.2016ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5.00 லட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடத்தில் (physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

3.5 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.

3.6 அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்.

3.7 மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

3.8 நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

3.9 முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

3.10 அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

3.11 மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

3.12 குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.

3.13 சரளை / கப்பி சாலைகள். (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)

3.14 உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்.

**4.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீதம் ஊரகப் பகுதிகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி மற்றும் நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

5. பணிகளை செயல்படுத்துதல் / தளவாடச் சாமான்களை கொள்முதல் செய்வது ஆகியவை 1998-ம் ஆண்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், மற்றும் அதன் 2000-ம் ஆண்டு விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
15.11.17